# 2. தேசிய வருமானமும் செலவும்

## 2.1. பொதுவான போக்குகள்

பொருளாதாரத்தின் தொடர்ச்சியான தாராள மயமாக்கலுடன் கடந்த பல ஆண்டுகளாக எய்தப்பெற்ற பொருளாதார வளர்ச்சியின் விரைவான விசையினை 1995 இலும் இலங்கை தொடர்ந்தும் பேணியது. உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொஉஉ) 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி முன்னைய ஐந்தாண்டு காலத்தின் ஆண்டு வளர்ச்சி வீதத்தைப் போன்றதேயாகும். அதேநேரம் மொத்தத் தேசிய உற்பத்தி (மொ. தே. உ.) (வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட மொ. உ. உற்பத்தி) 5.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 1995 இல் முதலீட்டு வருமான வெளிப்பாய்ச்சலில் ஏற்பட்ட மிகக்கூடியளவு வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

1995 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ. உ. உற்பத்தி ரூ. 6,619,020 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. நடுவாண்டுக் குடித்தொகை 181 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே 1995 இன் தலைக்குரிய மொ. உ. உற்பத்தி ரூ. 36,545 அல்லது ஐ. அ. டொலர் 713 ஆகக் கணிக்கப்பட்டுள்ளது. இது எந்தவொரு தெற்காசிய நாட்டினாலும் (மாலைதீவுகள் ஐ. அ. டொலர் 623, பாக்கித்தான் ஐ. அ. டொலர் 404, இந்தியா ஐ. அ. டொலர் 286, வங்காளதேசம் ஐ. அ. டொலர் 208, நேபாளம் ஐ. அ. டொலர் 169) பதிவுசெய்யப்பட்ட தலைக்குரிய வருமானத்திலும் பார்க்க மிக உயர்வாக இருந்தபோதும் கைத்தொழில் நாடுகள் (யப்பான் ஐ. அ. டொலர் 36,739, ஐ. அ. நாடுகள் ஐ. அ. டொலர் 25,852, சேர்மன் ஐ. அ. டொலர் 22,539) ஆசியாவின் பொருளாதார வளர்ச்சியடைந்த நகர நாடுகள் (சிங்கப்பூர் ஐ. அ. டொலர் 23,532, கொங்கொங் ஐ. அ. டொலர் 18,895) ஆசியாவின் வளர்ந்துவரும் ஏனைய பொருளாதாரங்கள் (தாய்வான் ஐ. அ. டொலர் 12,187, தென்கொரியா ஐ. அ. டொலர் 8,540, மலேசியா ஐ. அ. டொலர் 3,558, தாய்லாந்து ஐ. அ. டொலர் 2,411) என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கியும் இந்தோனேசியாவுடன் (ஐ. அ. டொலர் 909)* ஓரளவு நெருக்கமாகவும் காணப்பட்டது.

* தாய்வான் (1995) வங்காளதேசம், இந்தியா, கொங்கொங் (1993) தவிர தரவுகள் 1994 உடன் தொடர்புபட்டனவையாகும். 1993 இலும் 1994 இலும் இலங்கைக்கான நேரிணையான மொ. உ. உற்பத்தி தலைக்குரிய வருமானம் முறையே ஐ. அ. டொலர்கள் 587, 656 ஆகும். (மூலங்கள், பன்னாட்டு நிதியியல் புள்ளிவிபரங்கள், பன்னாட்டு நாணய நிதியம் மாச்சு 1996 மற்றும் உலக அட்டவணைகள், உலக வங்கி 1995).

எனினும் மொ. உ. உற்பத்தி நியதிகளில் தேசிய பொருளாதாரங்களை ஒப்பிடுகையில் தீவிரமான கவனம் செலுத்தப்படவேண்டுமென்பதுடன் அவர்கள் தொடர்பான வாழ்க்கைத் தரம் பற்றி அனுமானங்களிலும் கவனம் செலுத்தலிலும் அவதானமாக இருத்தல் வேண்டும். அண்மையில் ஐ. அ. டொலரின் கொள்வனவு சக்தியின் நியதிகளில் மொ. உ. உற்பத்தியை அளவிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை கிட்டத்தட்ட உண்மைத்தன்மையனவாக இருந்தாலும்கூட ஆசியாவின் உயர்ந்துவரும் பொருளாதாரங்களை எட்டிப்பிடிக்க இலங்கைக்கு இன்னமும் நீண்டதூரம் போகவேண்டியிருக்கும் என்பதே உண்மை.

எனினும், 17 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசாங்கம் மாற்றமடைந்தமையைத் தொடர்ந்து மீட்சி பெற்ற பொருளாதாரம் நல்ல எதிர்காலத்தினை கொண்டிருக்கும் என ஊகிக்கப்படுகிறது. அரசியல் வேறுபாடுகளைக் கவனத்திற்கொள்ளாது திறந்த மற்றும் நட்பு சந்தை பொருளாதாரக் கொள்கைகள் புதிய நிருவாகத்தின் பலமானதொரு கோட்பாட்டின்மூலம் தொடர்ச்சியான கொள்கைகளாக நிறுவப்பட்டது. இது முதலீட்டாளர்களினால் பலமாக வரவேற்கப்பட்டது. வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகளின்மூலம் தீர்ப்பதற்கான கடப்பாட்டுக்கும் வரவேற்புக் காணப்பட்டது. துர்ரதிஷ்டவசமாக, பேச்சுவார்த்தைகள் 1995 ஏப்பிறலில் பலனற்றதாகிவிட்டதுடன் அதனைத் தொடர்ந்து மீண்டும் ஆரம்பமான மோதல்கள் உற்பத்தி மற்றும் முதலீட்டு நியதிகளில் பொருளாதாரத்தின் மீது ஒரு சுமையாகத் தொடர்ந்தும் இருந்துவருகிறது. 1994 இன் பிற்பகுதியில் மெக்சிக்கோ பொருளாதாரத்தின் நெருக்கடியினால் உருவாக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக உயர்ந்துவரும் ஆசியப் பொருளாதாரங்களில் வெளிநாட்டு முதலீடு குறைவடைந்தமை நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

1995 இல் பொருளாதாரத்தின் திருப்திகரமான செயலாற்றத்திற்கு வேளாண்மையைப் பொறுத்தவரையில் காணப்பட்ட சிறந்த வானிலை நிலைமைகளும் வேளாண்மைப் பண்டங்களின் விலைகளில் காணப்பட்ட மேம்பாடும் உதவின. கோதுமைமாவின் விலைகளுக்கு உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டதன்மூலம் தூண்டப்பட்ட

## அட்டவணை 2.1

### (1982) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1994 - 1995

| வகை | மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1994* | 1995* | 1994* | 1995* | 1994* | 1995* |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் | 3.3 | 3.3 | 13.3 | 11.5 | 20.8 | 20.3 |
| 1.1 வேளாண்மை | 3.8 | 3.3 | 12.8 | 9.7 | 17.6 | 17.2 |
| தேயிலை | 4.4 | 1.6 | 1.7 | 0.5 | 2.0 | 1.9 |
| இறப்பர் | 1.0 | 0.9 | 0.1 | 0.1 | 0.4 | 0.4 |
| தெங்கு | 20.6 | 5.1 | 7.4 | 1.9 | 2.2 | 2.1 |
| நெல் | 4.7 | 4.7 | 3.9 | 3.4 | 4.3 | 4.3 |
| ஏனையவை | -0.1 | 2.6 | -0.2 | 3.8 | 8.7 | 8.5 |
| காட்டுத் தொழில் | -0.2 | 1.2 | -0.1 | 0.3 | 1.4 | 1.3 |
| கடற்றொழில் | 1.4 | 4.9 | 0.5 | 1.5 | 1.8 | 1.8 |
| 2. சுரங்கம் அகழ்தலும், கல் உடைத்தலும் | 6.0 | 3.4 | 2.8 | 1.4 | 2.5 | 2.4 |
| 3. தயாரிப்புத் தொழில் | 6.0 | 9.2 | 33.4 | 31.0 | 20.1 | 20.7 |
| உற்பத்திகளின் பதனிடல் | 13.0 | 4.4 | 5.2 | 1.7 | 2.3 | 2.2 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 8.8 | 10.0 | 26.5 | 27.6 | 16.4 | 17.0 |
| சிறு கைத்தொழில் | 5.7 | 6.5 | 0.9 | 0.9 | 0.8 | 0.8 |
| ஏனையவை | 6.8 | 7.8 | 0.8 | 0.8 | 0.6 | 0.6 |
| 4. கட்டடவாக்கம் | 6.0 | 4.9 | 8.0 | 5.8 | 7.0 | 7.0 |
| 5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் | 9.9 | 10.2 | 2.7 | 2.6 | 1.5 | 1.6 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 3.1 | 5.5 | 6.8 | 10.6 | 11.4 | 11.3 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் | 6.4 | 3.6 | 26.6 | 13.3 | 22.1 | 21.6 |
| இறக்குமதி | 9.4 | 2.1 | 16.1 | 3.3 | 9.4 | 9.0 |
| ஏற்றுமதி | 12.8 | 12.6 | 6.8 | 6.4 | 3.0 | 3.2 |
| உள்நாடு | 1.9 | 2.2 | 3.6 | 3.6 | 9.7 | 9.4 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 9.5 | 10.5 | 9.7 | 9.9 | 5.6 | 5.9 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை | 1.2 | 1.3 | 0.6 | 0.5 | 2.5 | 2.4 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 3.1 | 5.4 | 2.6 | 4.0 | 4.4 | 4.4 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) | 2.5 | 4.5 | 1.9 | 2.9 | 3.8 | 3.8 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி | 5.6 | 5.5 | 108.4 | 93.5 | 101.7 | 101.3 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் | - | - | -8.4 | 6.5 | -1.7 | -1.3 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி | 5.3 | 5.9 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தாழ்ந்தவிலைகள் நெற்செய்கையை ஊக்கம் குன்றச் செய்தபோதும் இவ்வாண்டில் இலங்கையுல் நெற் செய்கை முன்னெப்பொழுதுமில்லாத மட்டத்தினை எய்தியது. இதன்விளைவாக 1995 இல் அரிசி இறக்குமதி படிப்படியாக குறைக்கப்பட்டு முற்றாக நிறுத்தப்பட்டது. இறப்பர் மற்றும் தேயிலை விலைகள் மிக உயர்ந்த மட்டத்தினை அடைந்தபோதும் அமைப்புரீதியான பிரச்சினைகள் அதிகரித்த உற்பத்தியினால் கிடைத்த செழிப்பான நிலைமைகளிலிருந்தான முழுநன்மைகளையும் இத்துறைகள் அடையவிடாமல் தடுத்து விட்டன. அரசுடைமையை முதன்மையாகக் கொண்ட பெருந்தோட்ட வேளாண்மை தாழ்ந்த உற்பத்தி, உயர்ந்த செலவு, நிதியியல் தடைகள் என்பனவற்றினால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டன. முழுமையாக நோக்குகையில் வேளாண்மைத்துறை (காடாக்கல் மற்றும் மீன்பிடி உட்பட) 1995 இல் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது பெரும்பாலும் முன்னைய ஆண்டின் அதே மட்டத்திலேயே காணப்பட்டதெனினும், மொ. தே. உற்பத்தியில் அதன் பங்கு 21 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பொருளாதார வளர்ச்சிக்கான இதன் பங்களிப்பு 1994 இன் 13 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.பெரும்பாலான பங்களிப்பு நெல், பெருந்தோட்டமல்லாவேளாண்மை, குறிப்பாக மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம், காய்கறிகள் மற்றும் உள்நாட்டு நுகர்வுக்கான மற்றைய உற்பத்திப்பொருட்கள் என்பனவற்றிலிருந்து கிடைத்தன. அதேவேளை மீன்பிடித்துறை 5 சதவீதங்கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

வேளாண்மைத்துறையின் குறைவடைந்து செல்லும் பங்கு கவலைக்குரியதொரு விடயமாகவுள்ளது. ஏனெனில் இத்துறை தொழிற்படையில் ஏறத்தாழ 37 சதவீத தொழில்வாய்ப்பையும், நாட்டின் உணவுத் தேவையில் பெரும்பகுதியையும் ஏற்றுமதிகளில் 22 சதவீதத்தினையும், வேளாண்மையை அடிப்படையாகக்

## அட்டவணை 2.2

### மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1982 – 1995

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) | | | | 1982 விலைகளில் (ப. இ. ரூ.) | | | | சதவீத பங்கு | | | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1993* | 1994* | 1995* | 1982 | 1993* | 1994* | 1995* | 1982 | 1983 | 1983 | 1993 | 1994 | 1995 |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 145,143 | 716,304 | 843,397 | 963,445 | 145,143 | 235,016 | 254,783 | 264,674 | 100 | 100 | 100 | 100 | 8.4 | 3.9 |
| மொ. உ. உ. சந்தை விலைகளில் .. | 99,238 | 499,760 | 578,795 | 661,902 | 99,238 | 158,208 | 167,068 | 176,257 | 68 | 67 | 66 | 67 | 5.6 | 5.5 |
| காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் .. | 45,905 | 216,544 | 264,602 | 301,543 | 45,905 | 76,808 | 87,715 | 88,417 | 32 | 33 | 34 | 33 | 14.0 | 0.8 |
| 2. பயன்பாடு ... | 145,143 | 716,304 | 843,397 | 963,445 | 145,143 | 235,016 | 254,783 | 264,674 | 100 | 100 | 100 | 100 | 8.4 | 3.9 |
| நுகர்வு ... | 87,468 | 419,576 | 491,032 | 559,340 | 87,468 | 139,729 | 148,657 | 155,307 | 60 | 59 | 58 | 59 | 6.4 | 4.5 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 30,279 | 126,070 | 154,310 | 165,420 | 30,279 | 39,946 | 43,571 | 43,068 | 21 | 17 | 17 | 16 | 9.1 | 1.2 |
| அரசு ... | 4,866 | 20,765 | 18,455 | 20,877 | 4,866 | 5,531 | 4,335 | 4,617 | 3 | 2 | 2 | 2 | -21.6 | 6.5 |
| கூட்டுத்தாபனங்கள் | 25,413 | 105,305 | 136,649 | 144,543 | 25,413 | 34,415 | 39,236 | 38,4514 | 18 | 15 | 15 | 15 | 14.0 | -2.0 |
| தனியார்துறை | | | | | | | | | | | | | | |
| 2.3 இருப்புக்களில் மாற்றம் ... | 248 | 1,800 | 2,250 | 950 | 248 | 325 | 387 | 152 | 0 | 0 | 0 | 0 | 19.1 | -60.7 |
| 2.4 பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 27,148 | 168,858 | 195,805 | 237,735 | 27,148 | 55,016 | 62,168 | 66,147 | 19 | 23 | 24 | 25 | 13.0 | 6.4 |

* தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**சிறப்புக்குறிப்பு 1**

## மொதேஉ தலைக்குரிய வருமான கொள்வனவுச் சக்தி சமமதிப்பு

நாடொன்றின் தலைக்குரிய மொத்தத்தேசிய உற்பத்தி நாடுகளுக்கிடையேயான வருமானத்தை ஒப்பிடுவதற்கான சிறந்த அளவுகோல் ஒன்றை வழங்குவதில்லை. ஏனெனில் அந்த தலைக்குரிய வருமானத்தினால் வேறுபட்ட நாடுகளில் எதனைக் கொள்வனவு செய்யலாம் என்பதனை அது காட்டுவதில்லை. வேறுபட்ட நாணயங்களின் கொள்வனவுச்சக்தியை சீராக்கம் செய்வதற்காகவும் நாடுகளுக்கிடையேயான ஒப்பீட்டுக்கு வசதிசெய்து கொடுப்பதற்காகவும் மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானம், மொத்தத்தேசிய உற்பத்தி, தலைக்குரிய வருமான கொள்வனவுச்சக்தி சமமதிப்பிற்கு மாற்றப்படுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமான கொள்வனவு சக்தி சமமதிப்பிற்கு மாற்றல் செய்வதற்கும் மாற்றல் காரணியொன்று தேவைப்படுகின்றது. அந்த ஐக்கிய அமெரிக்க நாடுகளின் டொலர் ஒன்றினால் ஐக்கிய அமெரிக்காவில் கொள்வனவு செய்யப்படக்கூடிய பொருட்களின் கூடையொன்றினையொத்த பொருட்களையும் பண்டங்களையும் கொள்வனவு செய்வதற்கு நாடொன்றின் நாணயத்தின் எத்தனை அலகுகள் தேவைப்படும் என்பதே மாற்றல் காரணிக்கான வரைவிலக்கணமாகும். இது ஐக்கிய அமெரிக்க டொலரினால் குறிப்பிடப்பட்டபோதும் கணக்கிடும் அலகொன்றாக எத்தகைய நாணயத்தையும் பயன்படுத்தலாம்.

உலக வங்கியின் 1995 ஆம் ஆண்டுக்கான உலக அபிவிருத்தி அறிக்கையின் மிகப் பிந்திய தரவுகளின் (1993) அடிப்படையில் கைத்தொழில் நாடுகளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமான கொள்வனவுச் சக்தி சமமதிப்பீட்டுப் பெறுமதியானது நேரிணையான மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானத்தைவிட ஓரளவு குறைவாகக் காணப்படுகின்றவேளையில் கிழக்காசியாவின் புதியகைத்தொழில்மய நாடுகளான கொங்கொங், தாய்வான், தென்கொரியா, ஆகிய நாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானக் கொள்வனவுச் சக்தி சமமதிப்பீட்டுப் பெறுமதியானது மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானத்தைவிடக் கூடியதாகும். சுட்டெண்கள் இரண்டிற்கும் இடையேயான இடைவெளி மிகச்சிறியதாகும். ஆசியாவில் விரைவான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளான மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா அதேபோன்று தெற்காசிய நாடுகளான இந்தியா, பாக்கித்தான், வங்காளதேசம், நேபாளம் இலங்கை போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில் மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமான கொள்வனவுச்சக்தி சமமதிப்பீட்டுப் பெறுமதிகள் அதி உயர்வாகக் காணப்பட்டதுடன் நேரிணையான மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானம் பெறுமதிகளைவிட ஆறுமடங்கு வரையிலும் காணப்பட்டன. இலங்கையின் மொத்தத்தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமான கொள்வனவுச் சக்தி மதிப்பீட்டுப் பெறுமதிகள் நேரிணையான மொத்தத்தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானத்தைவிட கிட்டத்தட்ட ஐந்து மடங்காகும். முழுமையான மொத்தத் தேசிய உற்பத்திப் பெறுமதிகள் கணிக்கப்படுவதைவிட மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமான கொள்வனவுச்சக்தி சமமதிப்பீடு கவனத்திற் கொள்ளப்படும்போது நாடுகளுக்கிடையேயான வருமானத்தின் சமமின்மை குறைவாகவே உச்சரிக்கப்படுவது தெளிவாகின்றது. உதாரணமாக டொலர் நியதிகளில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி தலைக்குரிய வருமானம் இலங்கையைவிட 40 மடங்காகக் காணப்படுகின்ற வேளையில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மொத்தத்தேசிய உற்பத்தி கொள்வனவுச் சக்தி சமமதிப்பீடு இலங்கையைவிட 8 மடங்கு மட்டுமேயாகும்.

கொண்ட மூலப்பொருள் வழங்கலுக்கான உள்ளார்ந்த வளத்தையும் கொண்டிருப்பதாகும். அரசுடமையாக்கப்பட்ட பெருந்தோட்டத்துறையின் பிரச்சினைகள், நீண்டகால குத்தகைகளின் அடிப்படையில் அவற்றின் முகாமைத்துவத்தை தனியார்மயமாக்கும் தற்போதைய கொள்கையின் மூலம் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது புதிய முகாமையாளர்கள் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்புக்களை வழங்கும். பெருந்தோட்டமல்லாத வேளாண்மைத் துறையில் காணி ஒதுக்கீடு இறக்குமதி ஒழுங்கு விதிகள், கொடுகடன் மற்றும் உள்ளீடுகளுக்கான பணிப்புரை, மிகையான பாதுகாப்பு என்பனவற்றின்

மீதான அரசின் மிகக்கூடிய தலையீடுகளைக் குறைக்க பலமுயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

இலங்கையில் தயாரிப்புத்துறையின் விரைவான வளர்ச்சி அண்மைய வியப்புக்குரிய ஒரு நிகழ்வாக விளங்கியதுடன் இது பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டமையின் நேரடி விளைவாக இருந்தது. உண்மையில் இத்துறை 1995 இல் வேளாண்மைத்துறையை முதற்தடவையாக விஞ்சியதுடன் முன்னணித்துறையான மொத்த, சில்லறை, விற்பனை வர்த்தகத்தினைவிட மிகச்சிறியளவு மட்டுமே பின்னிற்கும் துறையாக தோன்றியுள்ளது. தயாரிப்புத்துறை 9 சதவீதத்தினால் பெரும்பாலும் முன்னைய ஆண்டின் அதே மட்டத்தில் வளர்ச்சியடைந்தது. 1995 இன் பொருளாதார வளர்ச்சியில் இத்துறையின் பங்கு 31 சதவீதத்தில் மிக உயர்ந்ததாக விளங்கி அதற்கடுத்த உயர்ந்த பங்கைக்கொண்டதுறையைவிட பெரும்பாலும் மூன்று மடங்கு அதிகமானதாக இருந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்கள் மட்டும் 1995 இன் பொருளாதார வளர்ச்சியில் 28 சதவீதத்திற்குப் பங்களித்தன. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் இவ்வலுவான செயலாற்றம் ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில் உற்பத்தியில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. உண்மையில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களில் கைத்தொழில் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டைப்போலவே 1995 இலும் 75 சதவீதத்திற்கு வகைகூறின. மொ. உ. உற்பத்தியில் தயாரிப்புத்துறையின் பங்கு 1994 இன் 20 சதவீதத்திலிருந்து 1995 இல் 21 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களில் உணவு, குடிபானம், புகையிலை, புடவை அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் மற்றும் உலோகமல்லா உற்பத்திகள் இவ்வாண்டில் வலுவான வளர்ச்சிச் செயலாற்றத்தினை பதிவு செய்தன. முன்னணித்துறையாக விளங்கிய புடவைகளும் ஆடைகளும் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த உணவு, குடிபானம், புகையிலை இதனையடுத்துக் காணப்பட்டது.

தயாரிப்புத்துறையின் அதே வளர்ச்சி பொருளாதாரத்தின் ஆரோக்கியமானதொரு பண்பாக விளங்குகின்றவேளையில் பெரும் சந்தைக்கான ஏற்றுமதி அனுமதிப்பங்கினை உருவாக்கியுள்ள பன்னாட்டு பல் நூலிழை உடன்படிக்கை படிப்படியாக முடிவிற்குக் கொண்டுவரப் படவுள்ளமையினால் புடவைகளிலும் ஆடைகளிலும் பெருமளவுக்குத் தங்கியிருத்தல் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயமாக இருக்கும். இது அனுமதிப்பங்கற்ற சந்தைகளை அடையக்கூடிய விதத்தில் உற்பத்தி ஆற்றலை மேம்படுத்துவதற்கு கைத்தொழில்களைத் தூண்டுவதற்கான கோரிக்கைகளை விடுக்கும் என்பதுடன் ஏற்றுமதி உள்ளார்ந்த வளத்தைக்கொண்ட புதிய கைத்தொழில்களை வளர்க்கவும் தூண்டும்.

பணிகள்துறையின் விரைவான வளர்ச்சி (அட்டவணை 2.1 இல் விடயம் 5 முதல் 11 வரை) பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சியில் பரந்தளவான முக்கிய நிகழ்வாகவுள்ளது. இத்துறை 1995 இல் 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து பதிவுசெய்யப்பட்ட பொருளாதார வளர்ச்சியில் 44 சதவீதத்திற்கு பங்களித்தது. இத்துறையின் உயர்ந்த வளர்ச்சி முக்கியமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை, வர்த்தகம், போக்குவரத்து களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் மற்றும் வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத்துறைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தினால் வலுவாக்கப்பட்டது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்துறை தொடர்ந்தும் முன்னணித்துறையாக விளங்கி மொ. உ. உற்பத்தியில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறியது. இறக்குமதி வர்த்தகத்தில் மெதுவான வளர்ச்சி காணப்பட்டபோதிலும் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் மேம்பாட்டினைக் காட்டியது. பொருளாதாரத்தில் விரைவாக வளர்ந்துவரும் துறைகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள நிதியியல்துறை 1994 இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1995 இல் பொருளாதார வளர்ச்சிக்கான இத்துறைகளின் பங்களிப்பு 1994 இனைப் போன்று 10 சதவீதமாக அமைந்து வங்கித்தொழில், காப்புறுதி, மற்றும் நிதியியல் பணிகளில் தொடர்ச்சியான விரிவாக்கத்தினைப் பிரதிபலித்தது. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல்துறை 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகளின் வெளியீட்டில் ஏற்பட்ட விரிவாக்கத்தின் மூலம் வீதி வழிப் பொருள் போக்குவரத்து அதிகரித்தமையும் பயணிகள் போக்குவரத்து தொகுதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் முக்கிய காரணங்களாக இருந்தன. அத்துடன், இவ்வாண்டில் தொடர்பூட்டல் மற்றும் துறைமுக நடவடிக்கைகளில் விரைவான விரிவாக்கம் காணப்பட்டது. தொடர்பூட்டல் பணிகள் 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து இயக்கவிசைமிக்க வளர்ச்சித்துறைகளிலொன்றாக இருந்தது. துறைமுகக் கையாளல்கள் 7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ஏற்றுமதிகளின் மற்றும் கையாளப்பட்ட மாற்றி–

கப்பலேற்றும் சரக்குகளின் கையாளலின் அதிகரித்த அளவினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

1995 இல் நடைமுறைக்காரணிச் செலவுவிலைகளில் மொ. தே. உற்பத்தி 14.8 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. பொருளாதாரத்தின் பொதுவானவிலை மாற்றங்களின் அளவையாக இருக்கும். உட்கிடை மொ. தே. உற்பத்திச்சுருக்கி முன்னைய ஆண்டின் 9.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1995 இல் 8.4 சதவீதங்கொண்ட தாழ்ந்த வீதத்தில் அதிகரித்தது. சுருக்கியில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், கொழும்பு பெரும்பாக விலைச்சுட்டெண், மொத்தவிற்பனை விலைச்சுட்டெண் ஆகிய கூட்டு விலைச் சுட்டெண்களினால் எடுத்துக்காட்டப்பட்ட பணவீக்கப் போக்குகளுடன் ஒத்துச் செல்வதாக இருந்தது.

சந்தைவிலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ. 7,257,100 இலட்சமாக அமைந்து 1995 இல் 12 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நுகர்வுச் செலவினம் 14 சதவீதத்தினாலும் முதலீட்டுச்செலவினம் 6 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. தனியார்நுகர்வுச் செலவின் வளர்ச்சி 1994 இன் 16 சதவீதத்திலிருந்து 1995 இல் 13 சதவீதத்திற்கு மெதுவடைந்தமைக்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே பெருமளவு காரணமாகும். பொதுநிருவாகம் மற்றும் பாதுகாப்பு மீதான அரசின் நுகர்வுச்செலவு 24 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக உயர்வடைந்தது.

மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ. 1,663,700 இலட்சத்திற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இதில் பெரும்பங்கிற்கு (87 சதவீதம்) தனியார்துறை வகைகூறியது. அரசமுதலீடு தேர்தல் ஆண்டான 1994 இல் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்தும் மீட்சியுற்று 18 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டில் தனியார்துறை முதலீடு 1994 இலும் 1995 இலும் கொள்வனவு செய்யப்பட்ட வானூர்திகளுக்கான சீராக்கம் செய்யப்பட்டபின் 9.6 சதவீத வளர்ச்சிப் போக்கினைப் பதிவுசெய்தது. இது முன்னைய ஆண்டிலும் பார்க்க குறைவாக இருந்தமைக்கு வெளிநாட்டு முதலீடுகளிலும் கட்டடவாக்க நடவடிக்கைகளிலும் காணப்பட்ட மெதுவான போக்கே காரணமாகும். பணவீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்பட்டபோது உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டுநிலையான மூலதனவாக்கம் முன்னைய ஆண்டின் 9 சதவீதங்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1995 இல் 1 சதவீதங்கொண்ட மிகச்சிறிதளவான வீழ்ச்சியைக் காட்டியது. இவ்வீழ்ச்சிக்கு வெளிநாட்டு முதலீட்டில் ஏற்பட்ட மிக்ககூடியளவு வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.

தொடர்ச்சியான பொருளாதார இயக்கவிசையினையும் சேமிப்பாளர்களுக்கு கிடைக்கத்தக்கதாக இருந்த கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1995 இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 1,025,620 இலட்சத்துக்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டதுடன் இது 16 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். மொ. உ. உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் இது 1994 இன் 15.2 சதவீதத்திலிருந்து 1995 இல் 15.5 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது. இதேவேளை வெளிநாட்டுச் சேமிப்புக்களுடன் சேர்ந்து தேசிய சேமிப்புக்கள் விகிதம் 19.1 சதவீதத்திலிருந்து 19.7 சதவீதத்திற்கு உயர்ந்து ஆரோக்கியமான மேம்பாட்டினைக் காட்டியது.

## 2.2. துறைவாரியான செயலாற்றம்

1995 இல் வேளாண்மையில் கூட்டப்பட்ட பெறுமதி 3.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையின் மந்தமான வளர்ச்சியானது மொ. உ. உற்பத்தியில் அதனது சார்பான பங்கினைக் குறைத்துவிட்டது. 1960 களின் தொடக்கப்பகுதியில் மொ. உ. உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு ஏறத்தாழ 40 சதவீதமாக இருந்தது. இது 1990 அளவில் 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1995 இல் இவ்விகிதம் மேலும் 20 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து கைத்தொழில் துறையின் விகிதத்தினைவிடக் குறைவாக இருந்தது. இந்நிலைமைக்கு இலங்கையின் பொருளாதாரம் பெருமளவிற்கு பன்முகப்படுத்தப்பட்ட அமைப்பினை நோக்கி படிப்படியாக மாற்றமடைவதை ஓரளவு காரணமாகக் குறிப்பிடலாம்.

1995 இல் தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி முறையே 1.6 சதவீதத்தினாலும் 0.9 சதவீதத்தினாலும் 5.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இவ்வாண்டில் இறப்பர் விலைகள் பெரும்பாலும் இருமடங்காக அதிகரித்தபோதும் உற்பத்தி 0.4 சதவீதத்தினால் மட்டும் சிறிதளவே அதிகரித்தது. அதேவேளையில் அண்மைய ஆண்டுகளில் இயற்கை இறப்பரின் உள்நாட்டு நுகர்வு அதிகரித்துள்ளமைக்கு இறப்பரை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தமையே காரணமாகும். தேயிலையின் விலைகளும் ஆண்டின் இறுதியில் மேம்பாட்டினைக்காட்டின. முன்னைய ஆண்டின்

20.6 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து 1995 இல் தேங்காய் உற்பத்தி 5.1 சதவீதத்தினால் மேலும் விரிவடைந்தது. சாதகமான வானிலை, அதிகரித்த வளமாக்கிப் பாவனை என்பனவற்றின் காலங்கடந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. இம்மூன்று பெருந்தோட்ட பயிர்களும் ஒன்றுசேர்ந்து மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 18 சதவீதத்திற்கும் வேளாண்மை ஏற்றுமதிகளில் 84 சதவீதத்திற்கும் பங்களித்தது. எனினும் இத்துறைக்குள்ளேயே இப்பயிர்களின் முக்கியத்துவம் குறைந்து செல்வதற்கு பயிர்களின் பன்முகப்படுத்தலும் மூலவளத்தடைகளின் விளைவாக ஏற்பட்ட முதலீட்டுப்பற்றாக்குறையும் பலவீனமான முகாமைத்துவமும் காரணங்களாகும்.

மிக முக்கியத்துவம் வாய்ந்த தனியொரு பயிரான நெல் 1995 இல் 4.7 சதவீத ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் 2,810 ஆயிரம் மெற்றிக் தொன் கொண்ட மிக உயர்ந்த மட்டத்தினை எய்தியது. வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு, அதிகளவு உதவிக் கொடுப்பனவைக் கொண்ட கோதுமைமாவின் காரணமாக அரிசிக்கான கேள்வி குறைவடைந்தமையால் 1995 இல் அரிசி இறக்குமதி மிகச்சிறிய மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மற்றைய அனைத்துப் பயிர்களையும் விலங்கு வளர்ப்பையும் உள்ளடக்கிய 'ஏனைய வேளாண்மை' 1995 இல் 2.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பெரும்பாலான துணை உணவுப்பயிர்களின் வெளியீடு இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. கால்நடை வளர்ப்பிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டது. கடந்த அண்மைக்காலத்தில் உற்பத்தியிலும், சந்தைப்படுத்தலிலும் நன்கமைந்துள்ள கோழிப்பண்ணைத் தொழில் இவ்வாண்டில் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது. நன்கமைந்த தனியார் நிறுவனங்களின் ஒழுங்கான கொள்வனவு நடவடிக்கைகளின் மூலம் ஊக்குவிக்கப்பட்ட பால் உற்பத்தி 1995 இல் 11 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் ஏற்றுமதிப் பயிர்களில் சில முக்கியமான விடயங்களின் உற்பத்தியில் வீழ்ச்சிகளை பதிவுசெய்யப்பட்டமையின் காரணமாக வளர்ச்சிக்கான இப்பயிர்களின் பங்களிப்பு மிகச்சிறிதாக இருந்தது.

1995 இல் மீன்பிடித்துறை சாதகமாக செயலாற்றியது. புதிய படகுகள், பொறிகள், மற்றும் மீன்பிடிக்கருவிகள் என்பன புதிதாகச் சேர்க்கப்பட்டமை ஒருநாள் படகுகளை பலநாள் கலங்களாக மாற்றியமை, ஆழ்கடல் மீன்பிடி அதிகரிக்கப்பட்டமை என்பன மீன்பிடி உற்பத்தியின் உயர்ந்த வளர்ச்சிக்கான முக்கிய உதவுக்காரணிகளாக இருந்தன. ஏற்றுமதிக்கான இறால் வளர்ப்பும் உயர்ந்த இலாபகரமான தொழிற்பாட்டை உருவாக்கியுள்ளது.

சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல்துறையில், பெரும்பங்கிற்கு வகைகூறும் இரத்தினக்கல் அகழ்தல் 1995 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் அருங்கற்கள் மற்றும் அவை சார்ந்த கற்களின் ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும் ஏனைய சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளில் காரியம் சிறப்பாகச் செயற்பட்டது. பன்னாட்டுச் சந்தையை முக்கிய நோக்கமாகக்கொண்ட மட்பாண்ட மற்றும் ஓட்டுக் கைத்தொழிலில் ஏற்பட்ட அதிகரிப்பு மூலப்பொருட்களினது அகழ்தல் வளர்ச்சிக்கு வழியமைத்தது. 1995 இல் எல்லாமாக சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்துறை, உண்மை நியதிகளில் 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு உற்பத்திகளின் பதனிடல் மற்றும் சிறு கைத்தொழில்களை உள்ளடக்கிய தொழிற்சாலைக் கைத்தொழில், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக வளர்ந்துவரும் முன்னணித்துறையாக இருந்து வருகின்றது. மொ. உ. உற்பத்தியில் இதன்பங்கு 1982 இன் 14 சதவீதத்திலிருந்து 1995 இல் 20 சதவீதத்திற்கு உறுதியாக வளர்ச்சியடைந்தது. இத்துறையில், தொழிற்சாலைக் கைத்தொழில் கூட்டப்பட்ட பெறுமதியில் 82 சதவீதத்திற்கு வகைகூறிய பெருந்தோட்டத்துறையின் மெதுவான விரிவாக்கத்தினையும் சிறு கைத்தொழில்துறை மிகக்குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளமையையும் பிரதிபலித்தது.

தொழிற்சாலைக் கைத்தொழில் விரிவடைந்தமைக்கு 1989 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கல் வழிமுறைகளின்கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்புகளும் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான வரிச்சலுகைகளும் உதவின. கைத்தொழில் வெளியீட்டில் 85 சதவீதத்திற்கும் மேலான பங்கிற்கு வகைகூறும் புடைவைகள், அணியும் ஆடைகள், மற்றும் தோல் உற்பத்திப்பொருட்கள் உணவு, குடிபானம், புகையிலை உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப்பொருட்கள் ஆகியவற்றைக் கொண்ட கைத்தொழில்துணை வகைகளில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சி தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறையின் வளர்ச்சிக்கு முக்கிய உதவுக்காரணிகளாக விளங்கின. தயாரிப்புத்துறையில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் பங்கு 1982 இன் 65 சதவீதத்திலிருந்து 1995 இல் 82 சதவீதத்திற்கு உயர்வடைந்துள்ளது.

தயாரிப்புத்துறையின் கீழுள்ள மற்றைய முக்கிய துணைத்துறையானது தோல், இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திப்பொருட்களின் பதனிடலாகும். இத்துணைத்துறை 1995 இல் 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்து, முன்னர் குறிப்பிடப்பட்ட வேளாண்மையின் போக்கினைப் பிரதிபலித்தது. குடிசைத்தொழில் மட்டத்தில் தொழிற்பட்டுவரும் கைத்தொழில்களை முக்கியமாக உள்ளடக்கிய சிறுகைத்தொழில்கள் முன்னைய ஆண்டின் 5.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1995 இல் 6.5 சதவீத வளர்ச்சியைக் கொண்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. புதிய சுய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கியும் விரிவாக்கியுமுள்ள இத்துறையின் வலுவான வளர்ச்சி மிகத் தெளிவாகக் காணப்பட்டபோதும் எண்ணிக்கைக் குறைபாடுகளின் காரணமாக மதிப்பீடுகள் மிக கடினமானதாக வுள்ளன. முக்கியமாக அப்பமனைக் கைத்தொழில் மற்றும் நெல் குற்றல் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய கைத்தொழில் வகை 7.8 சதவீதத்தினால் விரிவடைந்து நெல்லின் அதிகரித்த உற்பத்தியையும் அப்பமனை உற்பத்திப்பொருட்களுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியையும் பிரதிபலித்தது.

கட்டடங்களின் கட்டடவாக்கத்தையும் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் உள்ளடக்கும் கட்டடவாக்கத்துறை 1994 இன் 6 சதவீத வளர்ச்சியுடனும் 8 சதவீத பங்களிப்புடனும் ஒப்பிடுகையில் 1995 இல் 5 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து மொத்தப் பொருளாதார வளர்ச்சியில் 6 சதவீதத்திற்குப் பங்களித்தது. வெளிநாட்டு மூலதனப்பாய்ச்சலில் ஏற்பட்ட குறைப்பு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் கட்டடவாக்க நடவடிக்கைகள் குறைவடைய வழிவகுத்தன. அத்துடன் சீமெந்தின் தற்காலிக பற்றாக்குறைகளும் அதிகரித்த விலைகளும் வீடமைப்பு செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட சில தாமதங்களுடன் சேர்ந்து வீடமைப்புக் கட்டடவாக்க நடவடிக்கைகள் மெதுவடைய வழிவகுத்தன. எனினும் இவ்வாண்டில் வீதிஅமைப்பு விரிவடைந்தமைக்கு அரசாங்கம் இத்துறைக்கு ஒதுக்கிய நிதியில் பெருந்தொகை பயன்படுத்தப்பட்டமையே காரணமாகும்.

மின்வலு, வாயு, நீர் மற்றும் நலத்துறைப்பணிகள்துறை 10.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. வாயுத்துணைத்துறை உயர்ந்த வளர்ச்சிகளைப் பதிவுசெய்து திரவப்பெற்றோலிய வாயுவிற்கு நுகர்வோர் முன்னுரிமை மாற்றமடைந்தமையைப் பிரதிபலித்தது. 1995 இல் மின்வலு உருவாக்கம் 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களூடாகப் பெறப்பட்ட குழாய் நீர் வழங்கல் இவ்வாண்டில் அதிகரித்தது.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துணைத்துறையின் வளர்ச்சி 1994 இன் 3 சதவீதத்திலிருந்து 1995 இல் 6 சதவீதத்திற்கு உயர்வடைந்து மொ. உ. உற்பத்தியின் வளர்ச்சியில் 11 சதவீதத்திற்கு வகைகூறியது. தொடர்பூட்டல் துணைத்துறை 14 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு சிறிலங்கா ரெலிகொம்மின் அதிகரித்த முதலீடு ஓரளவு காரணமாகும். அதிகரித்த தனியார்துறைப் பங்களிப்பு இதனது மேம்பட்டவளர்ச்சிக்கு உதவியது. 1995 இல் செலூலர் நடமாடும் தொலைபேசியின் பேஜிங் அலகுகள் மற்றும் தொலைபேசிக் கூடுகள் என்பனவற்றின் எண்ணிக்கை 75 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தன. அஞ்சல் பணிகளின் துறைமுக கப்பற்படுத்தல் நடவடிக்கைகள் என்பனவற்றின் கூட்டிய பெறுமதி இவ்வாண்டில் விரிவடைந்தன. கொழும்பில் துறைமுக வசதிகள் நவீனமயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து கொள்கலனிடப்பட்ட சரக்குகையாளலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. களஞ்சியப்படுத்தல் மற்றும் கொள்கலன் மேடைவசதிகளும் அதிகரித்துவரும் கேள்விகளுக்கு சமமாக விரிவாக்கப்பட்டன.

வீதி வழிபொருட்போக்குவரத்து, பொது பேருந்துப் போக்குவரத்து, புகைவண்டிப் போக்குவரத்து மற்றும் வான் போக்குவரத்து என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துத் துணைத்துறை 1995 இல் 4.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம், வீதி வழிப்பொருள் போக்குவரத்தின் கூட்டப்பட்ட பெறுமதியை உயர்த்தின. இவ்வாண்டில் பெருந்தொகையான பேருந்துகள் உடற்கோப்புச் செய்யப்பட்டதுடன் போக்குவரத்திற்கும் விடப்பட்டன. கூட்டப்பட்ட பெறுமதியில் புகைவண்டிப் போக்குவரத்து சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தவேளையில் வான்வழிப் போக்குவரத்தும் தேசிய வான் சேவையின் வானூர்திகளின் தொகுதி அதிகரிக்கப்பட்டதன் மூலம் இயலளவு உயர்வடைந்தமையின் காரணமாக விரிவடைந்தது.

1995 இல் மொத்த சில்லறை விற்பனை வர்த்தகம் முன்னைய ஆண்டின் 6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும் மொ. தே. உற்பத்தியின் மொத்த வளர்ச்சியில்

இதன் பங்கு 1994 இன் 27 சதவீதத்திலிருந்து 1995 இல் 13 சதவீதத்திற்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு, முன்னணி நிலைமையை தொடர்ந்தும் பேணிவரும் துறையான இறக்குமதி வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெருமளவு காரணமாகும். ஏற்றுமதி வர்த்தகத்தில் கூட்டப்பட்ட பெறுமதி 12.6 சதவீதத்தினாலும் உள்நாட்டு வர்த்தகத்தில் கூட்டப்பட்ட பெறுமதி 2.2 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது.

வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத்துறையில் கூட்டப்பட்ட பெறுமதி உண்மை நியதிகளில் 11 சதவீத வளர்ச்சி வீதத்தினைப் பதிவுசெய்தவேளையில் பொதுவான மொ. உ. உற்பத்தியின் வளர்ச்சியில் இதன் பங்களிப்பு ஏறத்தாழ 10 சதவீதமாக இருந்தது. வர்த்தக வங்கித்தொழில் துறையினால் வழங்கப்பட்ட வசதிகளும் பணிகளும் 1995 இல் மேலும் மேம்பாடடைந்தன. இவ்வகையில் ஏறத்தாழ 53 சதவீதத்தினை வர்த்தக வங்கித்தொழில் கொண்டிருந்தது. உள்நாட்டுக்கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு விரிவாக்கமும், புதிய கருவிகள் மற்றும் நவீனவசதிகளுடன் பணிகள் பன்முகப் படுத்தப்பட்டமையும் வர்த்தக வங்கிதொழில்துறையின் விரிவாக்கத்திற்கு பங்களித்தன. மேலும், இவ்வாண்டில் புதிய வர்த்தக வங்கிகள் திறக்கப்பட்டமையானது வளர்ந்து செல்லும் நம்பிக்கையினைப் பிரதிபலிப்பதுடன் வங்கித்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்து கின்றது. மந்தமடைந்த பங்குச்சந்தை நடவடிக்கைகள் தரகு நிறுவனங்களின் மூலம் அதன் கூட்டப்பட்ட பெறுமதியைப் பாதித்தது. மிகப் போட்டித்தன்மை வாய்ந்ததாக மாறியுள்ள காப்புறுதித்துணைத்துறை இவ்வாண்டில் விரைவாக விரிவடைந்தது. புதிய காப்புறுதிப் பத்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை யும் தீவிரமான விற்பனைப் பிரச்சாரமும் இக்கைத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவின. 1995 இல் இத்துறையில் கூட்டப்பட்டபெறுமதி 4 சதவீதத்தினால் விரிவடைந்தது.

## 2.3. செலவு

1995 இல் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ. 7,257,100 இலட்சமாக அமைந்து 12 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வாண்டில் நுகர்வுச்செலவும் முதலீட்டுச் செலவும் முறையே 13.9 சதவீதத்தினாலும் 6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. மொத்த நுகர்வுச் செலவில் 85 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறும் தனியார்நுகர்வுச் செலவு 1995 இல் 12.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வளர்ச்சி பெயரளவு வருமான வளர்ச்சியிலும் பார்க்கக் குறைவானதாக இருந்ததுடன் இதன்விளைவாக, மொ. உ. உற்பத்தியின் விகிதமாக தனியார்நுகர்வு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. மொ.உ. உற்பத்தி தொடர்பான தனியார்நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு நீண்டகால நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் ஓரளவு காரணமாகும். தனியார் நுகர்வுச் செலவின் கூடையில் 28 சதவீதத்திற்கு வகைகூறிய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 1994 இன் 24 சதவீதத்திலிருந்து 1995 இல் 14 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சிடைந்தது. அரசின் நுகர்வுச்செலவினம் 24 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சம்பள அதிகரிப்புக்கள் உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் உயர்ந்த பாதுகாப்பு செலவினம் என்பனவே முக்கிய காரணங்களாகும்.

தனியார்துறை, அரசதுறை இரண்டினதும் முதலீட்டுச் செலவினத்தைக் காட்டும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் ரூ. 1,663,700 இலட்சத்திற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசமுதலீடு 1994 இன் வீழ்ச்சியிலிருந்து மீட்சிபெற்று 1995இல் ரூ. 209,270 இலட்சத்திற்கு உயர்ந்து 18 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1994 இல் பதிவு செய்யப்பட்ட 30 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து 1995 இல் தனியார்துறை முதலீட்டுச் செலவினம் ரூ. 1,454,430 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1994 இல் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சிக்கு தேசிய வான்சேவையான ஏயர்லங்காவினால் வானூர்திகள் கொள்வனவு செய்யப்பட்டமையே காரணமாகும். வானூர்திகளின் கொள்வனவிற்காக சீராக்கம் செய்யப்பட்டபொழுது

**அட்டவணை 2.3**

**நடைமுறைச் சந்தை விலைகளில் தேசிய சேமிப்புக்கள்**

(ப.இ. ரூபாய்களில்)

| வகை | 1982 | 1993 * | 1994 * | 1995 * |
|---|---|---|---|---|
| 1 மொ.உ.உ. சந்தை விலைகளில் | 99,238 | 499,760 | 579,147 | 661,902 |
| 2 உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 11,770 | 80,184 | 88,199 | 102,562 |
| 3 வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -1,959 | -5,979 | -8,310 | -7,082 |
| 4 வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் | 5,494 | 27,090 | 30,989 | 34,820 |
| 5 தேசிய சேமிப்புக்கள் | 15,305 | 101,295 | 110,878 | 130,300 |
| 6 உள்நாட்டு சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 2) | 11.9 | 16.0 | 15.2 | 15.5 |
| 7 தேசிய சேமிப்பு விகிதம் (1 இன் சதவீதமாக 5) | 15.4 | 20.3 | 19.1 | 19.7 |

* தற்காலிகமானவை மூலம் : இலங்கை மத்திய வங்கி

மொ. உ. உ. தனியார் முதலீட்டு விகிதம் 1.2 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் முழுமையாக ஏற்பட்டதாகும். மொ. உ. உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் தனியார்முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மேலே குறிப்பிடப்பட்ட கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான வீழ்ச்சியும் ஓரளவு காரணமாகும்.

### 2.4. மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்

மொத்த உள்நாட்டு உற்பத்தி பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் (வெளிநாட்டு மூலவளங்கள்) இறக்குமதி என்பனவற்றினால் மொத்தம் என வரைவிலக்கணப் படுத்தப்பட்ட பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்க தாயுள்ள மொத்த மூலவளங்கள் 1995 இன் ரூ. 843 பில்லியனிலிருந்து 1995 இல் ரூ. 963 பில்லியனுக்கு அதிகரித்தன. மொத்த மூவளங்களில் ஏற்பட்ட ரூ. 120 பில்லியன் கொண்ட அதிகரிப்பு மொ. உ. உற்பத்தியில் ஏற்பட்ட ரூ. 83 பில்லியன் அதிகரிப்பிலிருந்தும் வெளிநாட்டு மூலவளங்களில் ஏற்பட்ட ரூ. 37 பில்லியன்அதிகரிப்பிலிருந்தும் உருவாக்கப்பட்டது. மொத்த மூலவளங்களின் 58 சதவீதம் நுகர்வின்மீதும் 17 சதவீதம் மூலதன வாக்கத்தின்மீதும் செலவிடப்பட்டவேளையில் 25 சதவீதம் ஏற்றுமதிப்பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளில் பிரதிபலித்தது.

1995 இல் நிலையான விலைகளில் மதிப்பிடப்பட்ட மூவளங்களின் கிடைப்பனவு 1994 இன் 8.4 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 3.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1995 இல் உண்மை நியதிகளில் நுகர்வுச் செலவினம் 1994 இன் 6.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொ. உ. மூ. ஆக்கம் முன்னைய ஆண்டின் 9.1 சதவீதம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### 2.5. தேசிய சேமிப்புக்கள்

1995 இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 1,025,620 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. மொ. உ. உற்பத்தியில் 15. 5 சதவீதமாக அமைந்த இது மொ. உ. உற்பத்திக்கான விகிதமாக 15.2 சதவீதமாகக்காணப்பட்ட முன்னைய ஆண்டினைவிட 16 சதவீதங்கொண்டதொரு மேம்பாடாகும். வெளிநாட்டிற்கு புலம் பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களின் பணவனுப்பல்களை முக்கியமாக உள்ளடக்கிய தேறிய வெளிநாட்டு தனியார்மாற்றல்கள் 1995 இல் ரூ 348,200 இலட்சமாக அமைந்து 12.4 சதவீதங்கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. 1995 இல் தேறிய வெளிநாட்டு வருவாய்களையும் உள்ளடக்கிய தேசிய சேமிப்புக்கள் ரூ. 1,303,000 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. இது மொ. உ. உற்பத்தியில் 19.7 சதவீதமாகும்.